1980 பிப்ரவரி 4]

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விளைகிற அந்தக் கடலை வித்துக்களை விருத்தாசலத்தில் உள்ள ஆலைக்கு கொண்டு சென்று எண்ணைய் தயாரிப்பதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திலேயே ஆலை நிறுவினால் பொருளாதார ரீதியிலேயும் சிக்கனம் ஏற்படும். அடுத்து தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும், ஆகவே அந்த ஆலையை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான ஒரத்தநாடு தொகுதியில் ஏற்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்களுடைய கேள்விக்கு அளித்த விடையே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்களுடைய கேள்விக்கும் பொருந்தும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

விலத்தூரில் உள்ள நரிக்குறவர்களது வீடுகள்.

*வினா எண். 23— சீ. செல்வராஜ் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள விலத்தூர் என்ற கிராமத்தில் " நரிக் குறவர்களுக்காக " கட்டப்பட்ட வீடுகள் இடிந்து பழுதுபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில், அக் கட்டிடங்களைப் புதுப்பித்துத் தர எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) அரிசன நல சேவா சங்கத் தலைவர் திரு என். எம். ஆர். சுப்பராமன் அவர்களால் மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, விலத்தூர் கிராமத்தில் 1956-ம் ஆண்டு நரிக்குறவர்களுக்கு 30 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால் 6 மாத காலத்திற்குள் நரிக்குறவர்கள் அவ்விடத்தை விட்டு வேறிடம் சென்று விட்டார்கள். அவர்கள் திரும்பி வராததால், மேற்படி ஊரில் உள்ள வீடில்லாத அரிசனம், பிற்பட்டோர் மற்றும் இதர இந்துக்களுக்கு மேற்படி

வீடுகள் ஒப்படை செய்யப்பட்டு அவர்களின் சொந்தப் பராமரிப்பில் உள்ளன. எனவே மேற்படி கிராமத்தில் தற்சமயம் நரிக்குறவர்களுக்கான குடியிருப்பு ஏதுமில்லை.

(ஆ) மேற்படி வீடுகள் தனி நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு அவர்கள் சொந்தப் பராமரிப்பில் இருந்து வருகின்ற படியால் அவற்றைப் புதுப்பிக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்ததல்ல.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நரிக்குறவர்கள், என்னுடைய பகுதியான பழனியிலே கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் பல வருடங்களாக, அதாவது கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக டேரா போட்டு வசித்து வருகிறார்கள். ஆகவே அவர்கள் அங்கு தொடர்ந்து இருப்பதால் வெளியூரிலிருந்து வந்து செல்பவர்களுக்கு அவர்களைப் பார்க்கின்ற போது மிகவும் அநாகரீகமான முறையிலே காட்சி தருகின்றது, ஆகவே அந்த நரிக்குறவர்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத்தலைவரவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்கு நான் விடையளிக்கும் போது சொன்னபடி இந்த நரிக்குறவர்கள் நிரந்தரமாக ஒரு இடத்திலே குடியிருப்பவர்களாக இல்லாத காரணத்தாலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும் அவர்கள் ஒழுங்கான முறையிலே அவற்றைப் பயன்படுத்தி அதிலே குடியிருப்பார்களா என்ற சந்தேகம் அரசுக்கு இருக்கின்ற காரணத்தாலே அது அரசின் பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு நரிக்குறவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற நேரத்திலே அநேக ஜில்லாக்களிலே அவை இடிந்து பழுதான நிலையிலே இருக்கின்றன. அவற்றிலே அவர்கள் குடியிருக்க இயலாத நிலையிலே அவர்கள் வெளியே வசிக்கக்கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக புதுக்கோட்டையிலே அவர்கள் வீட்டை விட்டு வெளியே போய் வசிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த வீடுகளைச் செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, நரிக்குறவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வீடுகள் அவர்களுக்கே சொந்தகமாக்கப்பட்டு அவர்களுடைய பொறுப்பில் விடப்படுகிறது. அவர்கள் அதிலே

1980 பிப்ரவரி 4]

குடியேறிய பிறகு அப்படி வீடுகள் பழுதடைந்துவிடுகிற நிலை ஏற்பட்டால் அவைகளைப் பழுது பார்ப்பதற்கு எந்த விதமான திட்டமும் அரசிடம் இப்பொழுது இல்லை.

கடலாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம்.

*வினா எண் 24—திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலாடி தொகுதியில் மீனவர்கள் அதிகம் வாழ்கிற மூக்கையூர் கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அதன் வேலை துவங்கப்படும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, கடலாடி தொகுதியில் உள்ள மூக்கையூர் கிராமத்தில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். ஏராளமான மீன் பிடி படகுகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பிடித்த மீன்களையும், வலைகளையும் கிராமத்தில் போட்டுவிட்டு படகுகளை 20 மைலுக்கு அப்பால் கொண்டு போய் கட்டவேண்டி இருக்கிறது. ஏனென்றால் அப்படி வாய்ப்பில்லாத இடமாக இருக்கிறது. ஆகவே அந்த மூக்கையூர் பகுதியில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் மூக்கையூர் கிராம மக்களிடம் இருந்து அங்கே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. அதன் பேரில் அரசு பரிசீலனை செய்து ஏறத்தாழ 123 லட்சம் ரூபாய் செலவில் அங்கே ஒரு மீன்பிடித் துறைமுகம் கட்டுவது என்று முடிவு செய்து அதை துறைமுக ஆய்வு குழுவிற்கு அனுப்பிய நேரத்தில் துறைமுக ஆய்வுக் குழுவும் பெங்களூரில் இருக்கிற மீன்பிடித்துறைமுக முன் முதலீட்டு ஆய்வு

நிறுவனத்தின் இயக்குனரும் ஆய்வு செய்து மூக்கையூரில் துறைமுகம் அமைப்பதை விட வாலி நோக்கம் என்ற இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தான் சிறந்ததாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தது. அந்தக் கருத்துக்களின் பேரில் இப்பொழுது வாலிநோக்கத்திலே மீன் பிடித் துறைமுகம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. ஆகவே வாலிநோக்கத்திலே மீன் பிடித் துறைமுகம் இருக்கிற நேரத்திலே மூக்கையூரில் ஒரு துறைமுகம் அமைப்பதற்கான சூழ்நிலை இல்லை என்று அரசு கருதியது. ஆனாலும் அந்த மக்களிடம் இருந்து திரும்ப திரும்ப கோரிக்கைகள் வந்துகொண்டே இருப்பதினால், அந்த கோரிக்கைகளின் பேரில் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கத்தில் ஒரு மீன் பிடித் துறைமுகம் அமைக்கப் படவிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த மூக்கையூர் கிராமத்திலிருக்கிற மீனவர்கள் வாலி நோக்கம் கொண்டு போய் படகுகளை கட்டுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. அது மீனவர்களுக்கு தொல்லை தரக்கூடிய நிலைமையாக இருக்கிறது. ஆகவே அந்த மூக்கையூர் கிராமத்திலும் ஒரு துறைமுகம் கட்டுவதற்கு அரசு தீவிரமாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூக்கையூரிலே ஒரு மீன் பிடித் துறைமுகம் கட்டுவது என்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். அரசு ஆய்வுக்குப் பின்பு அங்கே துறைமுகம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் மத்திய அரசுக்கு இந்த அரசு அதற்கான சிபாரிசுகளை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கம் மீன்பிடித் துறைமுகம் என்பது நீண்ட நாளைய கோரிக்கை. நமது அரசு ஒவ்வொரு தடவையும் பரிசீலனை செய்வதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதியாண்டிலாவது அதைத் தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே பரிசீலனை செய்து வாலிநோக்கத்திலே துறைமுகம் கட்ட வேண்டும் என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. எந்த கிராமத்

1980 பிப்ரவரி 4]

திலேயோ எந்த கடலோரப் பகுதிகளிலேயோ மீன்பிடித் துறைமுகம் கட்ட வேண்டும் என்றால், மத்திய அரசாங்கத்தினிடம் அனுமதி பெற வேண்டிய நிலைமைதான் மாநில அரசுகளுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கத்திடம் சொல்லி இத் திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவியை சீக்கிரத்தில் பெற்றுத்தந்தால், அந்த இடத்தில்மீன்பிடித் துறைமுகத்தை ஆரம்பிக்க அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித்துறைமுகங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து எந்த அளவுக்கு என்னென்ன விதத்தில் உதவிகள் பெற வேண்டும். இதுவரை எத்தனை மீன்பிடித் துறைமுகங்கள் கட்டியதாக உள்ளது.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் 1966-67-ல். எந்த மாநிலத்தில் மீன் பிடித் துறைமுகம் அமைப்பதாக இருந்தாலும் அதற்கு ஏற்படுகிற செலவில் பாதி செலவை மாநில அரசும் பாதி செலவை மத்திய அரசும் ஏற்றுக் கொள்வது என்று முடிவு எடுத்து அதன்படி நிறைவேற்றப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு 1966–67-ம் ஆண்டுக்குப் பிறகு 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் மீன்பிடித்துறைமுகத்திற்கான செலவை எந்த மாநில அரசு அமைத்தாலும் அதற்கான முழு செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் 6–வது ஐந்தாண்டு திட்டத்தில் 50 சதவீதம் செலவை மாநில அரசும், 50 சதவீதம் செலவை மத்திய அரசும் ஏற்றுக்கொள்வது என்று இந்த 6–வது ஐந்தாண்டு திட்டத்தில் முடிவு எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் எத்தனை துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று புள்ளி விவரம் கேட்டிருக்கிறார்கள். அதற்கான தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் கேட்டு தருகிறோம்.

திரு. ரா. கு. பெருமாள் : மூக்கையூர் பக்கத்தில் வேம்பாறு, வைப்பாறு, சிப்பிகுளம், தருவை போன்ற இடங்களில் 5,000–க்கு மேற்பட்ட மீனவர்கள் வாழ்கிற பகுதியில் அங்கு ஓர் மீன்பிடித் துறைமுகம் கட்ட வேண்டும் என்று நான் பலமுறை மனு கொடுத்திருந்தும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.